सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

**नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका**

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

*புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக*


---

The translation in Tamil of The Interest Tax Act, 1974 (45 of 1974), The Hindu Gains of Learning Act, 1930 (30 of 1930) The Government Seal Act, 1862 (3 of 1862), The Foreigners Act, 1946 (31 of 1946), The Agricultural Produce Cess Act, 1940 (27 of 1940), The Protection of Human Rights Act, 1993 (10 of 1994), The Prevention of Corruption Act, 1988 (49 of 1988), The Cess and Other Taxes on minerals (Validation) Act, 1992 (16 of 1992), The Architects Act, 1972 (20 of 1972) The Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973), The Benami Transactions (Prohibition) Act, 1988 (45 of 1988) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

*வட்டிவரிச் சட்டம், 1974 (45/1974), இந்துக் கல்விவழி ஈட்டியச் சொத்துச் சட்டம், 1862 (30/1862), அரசாங்க இலச்சினைச் சட்டம், 1862 (3/1862), அயல்நாட்டினர் சட்டம், 1946 (31/1946), வேளாண் விளைபொருள் மேல்வரிச் சட்டம், 1940 (27/1940), மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 (10/1994), ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (49/1988), கனிமங்கள் மீதான மேல்வரி மற்றும் பிறவரிகள் (செல்லுந்தன்மையுடையதாக்குதல்) சட்டம், 1992 (16/1992), கட்டடக் கலைஞர்கள் சட்டம், 1972 (20/1972), அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973), பெயரிரவல் நடவடிக்கைகள் (தடைசெய்தல்) சட்டம், 1988 (45/1988) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியானவாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 52.00

# பெயரிரவல் நடவடிக்கைகள் (தடைசெய்தல்) சட்டம், 1988

(சட்ட எண் 45/1988)

[1988, செப்டம்பர் 5]

பெயரிரவல் நடவடிக்கைகளையும், பெயரிரவலில் வைத்துள்ள சொத்தினைத் திரும்பப் பெறுவதற்கான உரிமையையும், அத்துடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளையும் தடைசெய்வதற்கானதொரு சட்டம்.

இந்திய குடியரசின் முப்பத்து ஒன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம், பெயரிரவல் நடவடிக்கைகள் (தடைசெய்தல்) சட்டம், 1988 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) பிரிவுகள் 3, 5 மற்றும் 8 இன் வகையங்கள் உடனடியாக செல்லாற்றல் பெறும் மற்றும் இந்தச் சட்டத்தின் எஞ்சியுள்ள வகையங்கள், 1988, மே 19 ஆம் நாளன்று செல்லாற்றல் பெற்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. தறுவாயின் தேவை வேறானாலன்றி, இந்தச் சட்டத்தில்,— பொருள் வரையறைகள்.

(அ) "பெயரிரவல் நடவடிக்கை" என்பது, ஒருவருக்கு மற்றொருவரால் செலுத்தப்படும் அல்லது அளிக்கப்படும் மறுபயன் ஒன்றிற்காக எந்த நடவடிக்கையில் சொத்து உரிமை மாற்றம் செய்யப்படுகிறதோ அந்த நடவடிக்கை எதுவும் என்று பொருள்படும்;

(ஆ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகள் வாயிலாக வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(இ) "சொத்து" என்பது, அசைவியலாகவோ அல்லது நிலையியலாகவோ இருந்தாலும் பகுப்பொருளியலானதாகவோ அல்லது பருப்பொருளியலற்றதாகவோ இருந்தாலும் சொத்தின் வகை எதுவும் என்று பொருளபடும், மற்றும் அத்தகைய சொத்திலுள்ள உரிமை அல்லது உரித்தம் எதனையும் உள்ளடக்கும்.

3. (1) ஆள் எவரும் பெயரிரவல் நடவடிக்கை எதிலும் ஈடுபடுதல் ஆகாது. பெயரிரவல் நடவடிக்கைகளுக்குத் தடை

(2) எவரும், அவரது மனைவியின் பெயரிலோ அல்லது மணமாகாத மகளின் பெயரிலோ சொத்தினை விலைக்கு வாங்குவதற்கு உட்பிரிவு (1) இல் உள்ள எதுவும் பொருந்தாது மற்றும் இதற்கு மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, மேற்சொன்ன சொத்து, மனைவியின் அல்லது மணமாகாத மகளின் நன்மைக்காக விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது என்று துணிபு கொள்ளுதல் வேண்டும்.

(3) பெயரிரவல் நடவடிக்கை எதிலும் ஈடுபடுகிற எவராயினும் மூன்று ஆண்டு வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(2/1974) (4) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டம், 1973 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தப் பிரிவின்படியான குற்றச்செயல் ஒன்று பிடியாணை வேண்டியதாகவும், பிணையத்தில் விடுவிக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

4. (1) எவருடைய பெயரில் சொத்து உள்ளதோ அவருக்கு எதிராகவோ அல்லது பிறர் எவருக்கும் எதிராகவோ பெயரிரவலில் உள்ள சொத்து எதனையும் பொறுத்து, உரிமை எதனையும் செயற்படுத்துவதற்கான உரிமைவழக்கு கோருரிமை அல்லது நடவடிக்கை எதுவும், அத்தகைய சொத்தின் உண்மையான உரிமையாளரென கோருரிமை செய்கிற ஒருவரால் அல்லது அவர் சார்பாகத் தொடரப்படுதல் ஆகாது. பெயரிரவலில் உள்ள சொத்தினை திரும்பப் பெறுவதற்கான உரிமைக்குத் தடை

(2) எவருடைய பெயரில் அந்தச் சொத்து உள்ளதோ அவருக்கு எதிராகவோ அல்லது பிறர் எவருக்கும் எதிராகவோ பெயரிரவலில் உள்ள சொத்து எதனையும் பொறுத்த உரிமை எதற்கும் அடிப்படையான எதிர்வாதம் எதுவும் அத்தகைய சொத்தின் உண்மையான உரிமையாளரென கோருரிமை செய்கிற ஒருவரால் அல்லது அவர் சார்பாக உரிமை வழக்கு, கோருரிமை அல்லது நடவடிக்கை எதிலும் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும்,—

(அ) எவருடைய பெயரில் அந்தச் சொத்து உள்ளதோ அவர் பிரிவினையாகாத இந்தக் குடும்பத்தின் பங்குரிமையராக இருக்குமிடத்து, மற்றும் அந்தச் சொத்து, குடும்பத்திலுள்ள பங்குரிமையர்களின் நன்மைக்காக வைத்துவரப்படுமிடத்து, அல்லது

(ஆ) எவருடைய பெயரில் அந்தச் சொத்து உள்ளதோ அவர் ஒரு பொறுப்புக் கட்டளையராகவோ அல்லது நம்பக நிலையிலுள்ள பிறர் ஒருவராகவோ இருக்குமிடத்து மற்றும் அந்தச் சொத்து பிறிதொருவரின் நன்மைக்காக வைக்கப்பட்டு அவருக்கான ஒரு பொறுப்புக் கட்டளையராகவோ அல்லது அத்தகையவர் என்ற முறையிலோ இருக்குமிடத்து,

பொருந்தாது.

பெயரிரவலில் உள்ள சொத்து கையகப்படுத்தப் படுவதற்கு உள்ளாதல்.

5. (1) பெயரிரவலில் உள்ள சொத்துக்கள் அனைத்தும், வகுத்துரைக்கப்படலாகும் முறையிலும், அத்தகைய நெறிமுறையைப் பின்பற்றிய பின்பும், அத்தகைய அதிகார அமைப்பினால் கையகப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும். (4/1832)

(2) ஐயங்களை அகற்றும் பொருட்டு, உட்பிரிவு (1) இன்படி சொத்து எதனையும் கையகப்படுத்துவதற்கு பணத்தொகை எதுவும் செலுத்தப்படத்தக்கதாகாது என்று ஈங்கிதனால் விளம்பப்படுகிறது.

குறித்தசில நேர்வுகளில் சட்டம் பொருந்துதில்லை

6. இந்தப் பிரிவிலுள்ள எதுவும், சொத்து உரிமைமாற்றுச் சட்டம், 1882 இன் பிரிவு 53 இன் வகையங்களையோ அல்லது சட்ட முரணான நோக்கம் ஒன்றிற்காக உரிமை மாற்றங்களைச் செய்தல் தொடர்பான சட்டம் எதனையுமோ பாதித்தல் ஆகாது. (2/1882), (5/1908), (43/1961).

குறித்தசில சட்டங்களின் வகையங்களை நீக்கறவு செய்தல்.

7. (1) இந்தியப் பொறுப்புக் கட்டளைகள் சட்டம், 1882இன் பிரிவுகள் 81, 82 மற்றும் 94 உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டம், 1908 இன் பிரிவு 66 மற்றும் வருமானவரிச் சட்டம், 1961 இன் பிரிவு 281 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) ஐயங்களை அகற்றும் பொருட்டு, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில், வருமானவரிச் சட்டம், 1961 இன் பிரிவு 281 (அ) தொடர்ந்து இருந்துவரும் செயற்பாட்டை, உட்பிரிவு (1) இல் உள்ள எதுவும் பாதித்தல் ஆகாது என்று ஈங்கிதனால் விளம்பப்படுகிறது.

விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

8. (1) மைய அரசாங்கமானது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப் பாங்கிற்கு குந்தகமின்றியும், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும், அல்லது அவற்றுள் எதற்கும் வகை செய்யலாம் அவையாவன:—

(அ) பிரிவு 5 இன்படி சொத்துக்களை கையைகப்படுத்துவதற்கு தகுதிறமுள்ள அதிகார அமைப்பு;

(ஆ) பிரிவு 5 இன்படி சொத்துக்களை கையகப்படுத்துதல் எந்த முறையில் செய்யப்படவேண்டுமோ அந்த முறை மற்றும் அதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறை;

(இ) வகுத்துரைக்கப்படுமாறு கோரப்படும் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பொருட்பாடு எதுவும்

(3) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில் நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத் தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட, ஒரு கால அளவிற்கு அது அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத் தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத் தொடர்களை உடனடியாக தொடர்ந்துவரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகலும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும் எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட, எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

நீக்கறவும் காப்பும்.

9 (1) பெயரிரவல் நடவடிக்கைகள் (சொத்தினைத் திரும்பப் பெறுவதற்கான உரிமையினைத் தடை செய்தல்) அவசரச் சட்டம், 1988 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருப்பினும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்த சட்டத்தின் நேரிணையான வகையங்களின் படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.